Nallur Branch Library

விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆவணி 19 ஜுலைக் 28 இதழ் 206

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 4-9-1986

## இராணுவத்தினரின் பாதுகாப்பு அரண் விடுதலைப்புலிகளால் தகர்ப்பு

### 'ஷெல்' தாக்குதல் நிறுத்தம்; மர்மம் என்னவோ!

வல்வெட்டித்துறை, புதன் வல்வெட்டித்துறை இராணுவ முகாமில் கடந்த இரு வாரங்களின் முன்னர் முகாமுக்கு மிக அண்மையிலுள்ள இராணுவத்தினரின் பாதுகாப்பு அரணாக இருந்து வந்த ஆட்களற்ற மாடிவீடு ஒன்று விடுதலைப் புலிகளால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதைத் தொடர்ந்து வல்வை இராணுவ முகாமிலிருந்து துவக்குச் சூட்டுச் சத்தமோ ஷெல் அடிச் சத்தமோ கேட்பதில்லை.

அன்றிலிருந்து முகாமில் சிங்க இலச்சினை பொறிக்கப்பட்ட வெள்ளைக் கொடி பறந்து கொண்டிருப்பதைக் காணக் கூடியதாகவிருக்கிறது.

இது பற்றி இப்பகுதி மக்கள் மனதில் பலவிதமான எண்ணங்களைத் தோற்றுவிக்கிறது. தினமும் பலவித வெடிச் சத்தங்களைக் கேட்ட மக்கள் இவர்கள் அமைதியாக பதுங்கியிருப்பது ஒருசமயம் திடீரென பாயவும் கூடும் எனவும் எண்ணத்தோன்றுகிறது. [கே]

### இளம் பெண் நித்திரையில் கைது

[நமது நிருபர்]

திருமலை நகரில் நேற்று அதிகாலை வீட்டில் நித்திரை

(4ம் பக்கம் பார்க்க

### ● மன்னாரில் நான்கு முகாம்களிலுள்ள

# படையினர் வெளிவராதபடி புலிகள் தடுத்துவைப்பு

## பிரதான பாலம் தகர்க்கப்பட்டது

(நமது நிருபர்)

**மன்னார் கோட்டை, தள்ளாடி, முருங்கன், தலைமன்னார் இராணுவ முகாங்களிலிருந்து ஆயுதப் படையினரை வெளிவராதபடி உள்ளே தடுத்து வைத்து மன்னார் மாவட்டத்தை நேற்று முதல் விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.**

**அத்துடன் பிற மாவட்டங்களுடன் மன்னாரை இணைக்கும் பாரிய பிரதான பாலத்தையும் குண்டு வைத்துத் தகர்த்துள்ளனர்.**

தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று மாலை விடுத்துள்ள அறிக்கையில் மேற்குறிப்பிட்ட தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை 6 மணியிலிருந்து மன்னார் கோட்டை, தள்ளாடி, முருங்கன், தலைமன்னார் ஆகிய இராணுவ முகாம்களையும் சுற்றி வளைத்த விடுதலைப் புலிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்துவதாகவும் அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இராணுவ முகாம்களிலிருந்து ஆயுதப் படையினர் வெளியேறாத வண்ணம் காவல் அரண்களும் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

(4-ம் பக்கம் பார்க்க

### கனகபுரம் நேரடி மோதல்

யாழ்ப்பாணம், வியாழன் கனகபுரத்தில் விடுதலை இயக்கத்தின் போராளிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நேரடி மோதல் நடைபெற்றது. நேற்றைய ஈழநாடு இதழில் கனகபுரம்

(8ம் பக்கம் பார்க்க)

### மட்டுநகரில் படையினர் தேடுதல் வேட்டை

## மூவர் சுட்டுக்கொலை 200 பேர் வரை கைது

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு விமான நிலையத்துக்கு முன்பாகவுள்ள நகர்பகுதியை சுற்றி வளைத்து தேடுதல் நடாத்திய அதிரடிப் படையினர் 200 பேரைக் கைது செய்துள்ளனர்

நேற்றுக்காலை நடைபெற்ற இத் தேடுதல் வேட்டையின் போது அதிரடிப்படையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் பொதுமக்களில் மூவர் ஸ்தலத்திலேயே பலியானார்கள்.

கைது செய்யப்பட்டவர்கள் அதிரடிப்படை முகாமுக்கு விசாரணைக்காகக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். (மா)

### யாழ். முகாம்களில் பீரங்கிகள்?

யாழ்ப்பாணம். வியாழன், யாழ். குடாநாட்டிலுள்ள சில ராணுவ முகாமகளில் பீரங்கிகள் பொருத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

யாழ். கோட்டை, வல்வை, தொண்டமனாறு, பருத்தித்துறை ஆகிய இடங்களிலுள்ள முகாம்களிலேயேஇவை பொருத்தப்பட்டிருப்பதாகவும், இவை சுமார் ½ மைல் தூரம்வரை தாக்கக்கூடியவை எனவும் தெரியவருகிறது.

### "ஷெல்" தாக்குதலில் கணவன் மனைவி காயம்

மன்னார், புதன் மன்னார் கோட்டை, தள்ளாடி ராணுவ முகாம்களிலிருந்து இன்று மேற்கொள்ளப்பட்ட 'ஷெல்' தாக்குதலில் ஒருகணவனும் மனைவியும் காயமடைந்துள்ளனர்.

மன்னாரில் படையினருக்கும் போராளிகளுக்குமிடையே இன்று கடும் மோதல் இடம் பெற்றது இதனையடுத்தே இவ்விரு முகாம்களிலிருந்து 'ஷெல்' தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன

இவற்றில் ஒரு 'ஷெல்' மன்னார் பெரிய கடையில் விழுந்து வெடித்த போது கணவனும் மனைவியும் காயமடைந்தனர். மனைவி கண்கள் வெளியே வந்த நிலையில் ஆபத்தான கட்டத்தில் மன்னார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கணவனது ஒரு கால் உடைந்து விட்டது.

இச்சம்பவங்களையடுத்து மன்னார் நகரம் வெறிச் சோடிக் காணப்பட்டது. காரியாலயங்கள் இயங்கவில்லை. வீதிகளில் இளைஞர்கள் ஆயுத பாணிகளாகக் காணப்பட்டதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(வவ. திரு)

### பலாலி இராணுவ முகாமிலிருந்து "ஷெல்" தாக்குதல்: மூவர் படுகாயம் - கால்நடைகள் பலி

வசாவிளான், வியா. பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்றுககாலை முதல் ஷெல்கள் ஏவி விடப்பட்ட வண்ணமிருந்தன.

குரும்பசிட்டியில் உள்ள டாக்டர் ஒருவரின் வீட்டில் ஷெல் விழுந்ததால் 3 பேர் படுகாயமுற்றனர், அவ்வீடும் பலத்த சேதமடைந்தது.

மேலும் 'ஷெல்' தாக்குதலால் பலாலி முகாமுக்கு அண்மித்த வீடுகளில் இருந்த கால்நடைகள் பல இறந்துள்ளன, வீடுகளும் சேதமடைந்துள்ளன. (மா)

### பொம்பர் விமானங்களின் நடமாட்டம்

யாழ்ப்பாணம், வியா பலாலி முகாமை அண்மித்த கிராமங்களுக்கு மேலாக இரு பொம்பர் விமானங்கள் பல தடவை வட்டமிட்ட வண்ணமிருந்தன.

இவ்விமானங்களின் நடமாட்டத்தால் அக்கிராமமக்கள் அச்சமடைந்து உடைமுடிச்சுகளுடன் பாதுகாப்பான இடங்களை நாடிப் புறப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். (மா)

### யாழ். எஸ். பி பதவி தொடர்ந்தும் காலி

கொழும்பு, புதன் யாழ்ப்பாணம் பொலிஸ் அத்தியட்சகர் (எஸ். பி) பதவியை ஏற்பதற்கு எவரும் முன்வராததால் அப்பதவி தொடர்ந்தும் காலியாகவே இருந்து வருவதாகத் தெரிய வருகிறது

முன்பு பொலிஸ் அத்தியட்சகராக இருந்த திரு. உடுகம் பொல இடமாற்றம் பெற்றுச் சென்றதைத் தொடர்ந்து இப்பதவி வெற்றிடம் ஏற்பட

(4ம் பக்கம் பார்க்க)

### திருமணத் திருமுகம்

மணமகன் மணமகள்

நித்தியானந்தராஜா உருக்குமணி

வண்ணார்பண்ணை சிவப்பிரகாசம்வீதி வீடியோ புளொசம்ஸ் உரிமையாளர் குமாரசிங்கம் நித்தியானந்தராஜாவுக்கும், கந்தர்மடம் நாகரத்தினம் உருக்குமணிக்கும் (5-9-86) ஆவணி 20ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 8-30 மணி தொடக்கம் 9-30 வரையுமுள்ள சுபமுகூர்த்தத்தில் வண்ணார் பண்ணைவடக்கு நாச்சிமார்கோவிலில் திருமணம் நடைபெறும்.

வீடியோ புளொசம்ஸ்.

30, சிவப்பிரகாசம் றேட்,
வண்ணார்பண்ணை. (C-4426)

### ஹராரேயில் 'பிரேமா' உரை

ஹராரே, செப் 3 ...ட்ட ரீதியாக தேர்ந்தெடுக்கப்படும் அரசுகளுக்கெதிராக நடத்தப்படும் பயங்கரவாதத்தைக் கண்டிக்க

(4ம் பக்கம் பார்க்க)

### ஈ. பி. ஆர். எல். எவ். இன்——

## ஈழம் தபால் தலை வெளியீடு 5ம் திகதி நடைபெறும்

யாழ்ப்பாணம், வியாழன் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ. பி. ஆர். எல். எப்) ஈழம் தபால் தலை நாளை 5ம் திகதி முதல் அமுலுக்குவரும் என மேற்படி இயக்கம் அறிவித்துள்ளது.

இதையொட்டி அன்றைய தினம் காலை 10 மணிக்கு நல்லூர் கைலாயபிள்ளையார் கோயிலடி முன்றலில் 'ஈழம் தபால் தலை' வெளியீட்டு விழா நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சக இயக்கப் பிரதிநிதிகள், வெகுஜன ஸ்தாபனங்களின்

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

மைசூர் அரிசி நம்பர்-1 கல்லில்லாதது, சுத்தமானது, தரமானது சுவையானதும்கூட. கைதேர்ந்த தொழிலாளர்களால் இயந்திரமூலம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது. உங்கள் சகலதேவைகளுக்கும் எங்கும் கிடைக்கும் மைசூர் அரிசியையே கேட்டு வாங்குங்கள். ஒருமுறை பாவித்தால் உண்மை விளங்கும். தயாரிப்பாளர்-மைசூர் அரிசி ஆலை, மானிப்பாய். C 4200

### தேவை

தையல் வேலையில் அனுபவமுள்ள பெண்கள் தேவை. மானிப்பாய் சுற்றாடலில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. விளம்பர இல. C-4324 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C-4324]

எமது தொழிலகத்திற்குப் பின்வருவோர் உடனேதேவை. [1] தளபாடங்கள் செய்யக்கூடிய தச்சுத் தொழிலாளர்கள். [2] இலைப்பாறிய கட்டிட மேற்பார்வையாளர். 05-09-86 அன்று காலை 9க்கும் 11 மணிக்குமிடையில் நேரில் வருக. ''மெற்மே ஸ்ரீல் இன்டஸ்றீஸ்'', 17/4, றயில்வே வியூ, மினி பஸ்ரான்ட் அருகாமை, கச்சேரியடி. (C 4403)

### வகுப்புகள்

Spoken English, பகல்நேர புதிய வகுப்பு. திங்கள், புதன், வெள்ளி நாட்களில். காலை 9-10 மணிவரை. ஆரம்பம்: 10 09-86 S. P.I yar, 12, வைமன் வீதி, நல்லூர். [C 4402]

**A/L 87**

**தூய பிரயோககணிதம்**

பகல் நேர வகுப்பு

**ஆரம்பம்: 5-9-86**

10-30: காவிகள்

11-45: அட்சரகணிதம்

ஆசிரியர்: ரவிமோகன்

யாழ்ப்பாணம்.

(வெலிங்டன் சந்திக்கும் பெருமான் கோவிலுக்கும் இடையில்)

C 4278

## மக்கள் அதிருப்தி

நெல்லியடி, புதன்

வடமராட்சிப் பகுதியில் உள்ள சமாதான சபை ஒன்றின் நடவடிக்கைகள் பற்றிப் பொதுமக்கள் மத்தியில் பரவலான அதிருப்தி நிலவுகிறது.

இச் சபையின் தீர்ப்புகளின் பிரதிகள் தேவைப்படும் கட்சிக்காரருக்கு அவை மறுக்கப்படுவதாகவும் அவற்றுக்கு மனுப்பண்ணுபவர்களுக்கு மறுமொழி கூடக்கொடுப்பதில்லையென்றும் அறியவருகிறது.

பிரதிக்கு தேவையான பணம் எவ்வளவு எனக் கேட்டாலும் மறு மொழிகிடைப்பதில்லையாம் ''உங்களுக்கு ஏன் பிரதி?'' என்ற ஒரே கேள்விதான் பதிலாகக்கிடைக்கிறதாம். (இ)

### ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்தில் (பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்)

சொத்தறுதியில்லாது காலஞ்சென்ற காரைநகர் கிழக்குகளபூமிதன்னை கந்தையா நடராசாவின் மரணச் சொத்துக்கள் தொடர்பிலான விடயம் சம்பந்தமாக.

— காலஞ்சென்றவர்

கந்தையா நடராசா கைம்பெண் சிவமணி, கரப்பிட்டியந்தனை, களபூமி, காரைநகர் கிழக்கு.

— மனுதாரர்

வழ. இல. தத்துவம்/110

எதிர்

1. வெற்றிவேலு கந்தையா கைம்பெண் தெய்வானை, தன்னை, களபூமி, காரைநகர் கிழக்கு.
2. கந்தையா நடராசா மகள் லோகேஸ்வரி, கரப்பிட்டியந்தனை. களபூமி காரைநகர் கிழக்கு [தனது வழக்குப் பாதுகாவலர் சங்கரப்பிள்ளை அமிர்தலிங்கம் மூலம் தோற்றுகின்றார்.]

— எதிர்மனுதாரர்கள்

மேலே உள்ள இலக்கங்கொண்ட மரணச்சொத்து வழக்கு மேலே பெயர் குறித்த காலஞ்சென்றவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 10 ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோற்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்கள்

1986 ம் ஆண்டு ஆவணி மாதம் 8ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,
சு. வ. கணேசன்,
பதிவாளர்.

வரைவு,

எஸ். ஏ. ஈ. ஏகநாதன்,
மனுதாரரின் சட்டத்தரணி.
(C 4366)

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

மல்லாகம் கோட்டைக்காட்டைச் சேர்ந்த காலஞ்சென்ற முருகர் விசுவலிங்கம் என்பவரின் மரணசாதனமில்லாத மரணச்சொத்துக்களினதும் உடமைப் பொருள்களினதும் விடயத்தில்,

மரணமெய்தியவர்.

இல. மரணசாதன நியாயாதிக்கம் } T.287

முருகர் விசுவலிங்கம் பெண் பவானந்தராணி கோட்டைக்காடு, மல்லாகம்.

எதிர் மனுதாரர்.

1. விசுவலிங்கம் மகள் விஜிமயூரா கோட்டைகாடு, மல்லாகம்.
2. கதிரன் முருகன் சிவன் கோவிலடி மட்டுவில் தெற்கு பராயமற்ற 1ம் எதிர்மனுதாரர் பாதுகாவலர்.

எதிர்மனுதார்கள்.

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட மரணமெய்தியவரின் மரணச்சொத்துக்களை நிருபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ம் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1986 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01 ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி,
ஆழ்வார் சிவபாதசுந்தரம்,
பதிவாளர்.

வரைவு

க. குணரத்தினம்,
மனுதாரின் சட்டத்தரணி.
(C 4374)

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் பிறவுண் றேட்டில் வசித்து காலஞ்சென்ற சிதம்பரநாதக் குருக்கள் சங்கரநாராயண ஐயர் என்பவரின் மரணசாதனமின்றி இறந்த மரணச் சொத்துக்கள் சம்பந்தமாக.

- மரணமெய்தியவர்.

வழ. இல. தத்துவம் /3983

சங்கரநாராயண ஐயர் கைம்பெண் சுந்தரகுணநாயகி இல. 27/4, இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

மனுதார்,

மேலே இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட காலஞ்சென்றவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986ம் ஆண்டு புரட்டாதி மாதம் 12ம் நாளன்று முற்பகல் 9-00 மணிககு இந்நீதிமன்றத்தில் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதறகுக் காரணம்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1986ம் ஆண்டு ஆவணி மாதம் 6ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,
க. நாகேந்திரன்
பதிவாளருக்காக

வரைந்தது.
செ. யு. யேம்ஸ்,
மனுதாரின் சட்டத்தரணி.
C 4378

### 3-வது ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

வைத்திய கலாநிதி

த. க. சிவஞானம்

(பரணி மருந்துச்சாலை ஸ்தாபகர்)

பிறப்பு: 13-4-1921
இறப்பு; 7-9-1983

கண்ணில் இமையாய்
வாழ்ந்து வந்தீர்!
மண்ணில் துணையாய்
சேர்ந்து வந்தீர்!
பண்ணின் கனிவாய்
இருந்து வந்தீர்!
விண்ணில் தனியாய்
மறைந்து சென்றீர்!!

இங்ஙனம்
மனைவி மக்கள்,
மரு மக்கள்,
பேரப்பிள்ளைகள்.

'ஐங்கர பவனம்'
கோண்டாவில் மேற்கு.
கோண்டாவில். (C4408)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## விழிப்புக்குழு அமைக்கக் கோரிக்கை

பச்சிலைப்பள்ளி புதன்

பாடசாலைகளின் பாதுகாப்புக்கருதி பாடசாலைகளில் விழிப்புக் குழுக்களை அமைக்குமட்டி யாழ் மாவட்டப் பாடசாலை அதிபர்களை யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

தெரிவு செய்யப்படும் விழிப்புக் ழுவில் அதிபர், ஆசிரியர்கள், மாணவ தலைவர் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினரில் ஒருவர் ஆகியோர் இடம்பெறுதல் வேண்டுமென கோரப்பட்டுள்ளது (ஓ)

### ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

செ. சிவபாதம்

(ஏகாம்பரம் வீதி, திருகோணமலை. வேலஅழகன் ஸ்ரோர் உரிமையாளர்]

இறைவன் படைப்பு: 20-9-1947

இறைவன் திருவடியில்: 4-9-1985

சிறு வயது முதல் முறை தவறாது விரதங்களை அனுட்டித்தும் இறைவன் திருநாமத்தைக் சொல்லிச் சொல்லி வந்த தெய்வமே! உறவுக்காய் வாழ்ந்து தனக்கென்ற வாழ்க்கையை மூன்று வருடத்தில் வாழ்ந்து அப்பா என மழலையில் கூப்பிடும்நாளில் அன்பு மகளையும் மனைவியையும் விட்டு பத்துநாட்களில் திரும்பி வருவதாக திருகோணமலை சென்று வருவதற்கு தடைகள் ஏற்பட்டு கோணேஸ்வரர் மண்ணில் கொடியவர்களின் துப்பாக்கி குண்டுக்கு இரையாகி கோணேஸ்வரர் புண்ணிய பூமியில் சங்கமமாய் ஆகிவிட்டீரோ? உங்களை நினைத்து அப்பா எங்கே? என ஏங்கித் தவித்து அழும் பொழுது அன்பு மகளுக்கு ஆறுதல் கூற இயலாது. உங்கள் பிரிவால் மனங் கலங்கி விழியோரம் வழியும் கண்ணீரைப் பார்த்து 'அம்மா ஏன் அழுகின்றீர்கள்?' எனக் கேட்டும். கண்ணீருடன் கதை சொல்லும் அன்பு மகளுக்கும் மனைவிக்கும் என்றும் துணையாக நின்று வழி காட்டுங்கள். மண்ணிலிருந்து மடியும் வரை உங்கள் அன்பு எங்களை விட்டுப்போகாது. என்றும் எங்கள் கண்ணீர்த் துளிகள் உங்களுக்குச் சமர்ப்பணம்.

அன்புமகள் சிந்துஜாவும், மனைவியும்.

வியாபாரிமூலை,
பருத்தித்துறை. [C4316]

**விக்ரு** டியூசன் சென்ரர், 52, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

[கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

**A/L 88** புதிய பிரிவு ஆரம்பம்: 6- 9- 86 காலை 11 மணி

**87** ஆண்டுக்கான புதியபிரிவு 8 மணிக்கு ஆரம்பமாகிவிட்டது.

கலை, வர்த்தக வகுப்புக்களுக்கான தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு.

| | |
|---|---|
| பொருளியல்:- | திரு. கிருஸ்ணனந்தன், |
| வர்த்தகம்:- | திரு. லங்கா, |
| கணக்கியல்:- | திரு. வன்னியசிங்கம், |
| அளவையியல்:- | திரு. சுப்பிரமணியம், |
| தமிழ்:- | திரு. குழந்தை, |
| இந்துநாகரிகம்:- | திரு. குணரெத்தினம், |
| புவியியல்:- | திரு. குணராஜா, |
| அரசியல்:- | திரு. மஃறூப். |

முக்கிய குறிப்பு:- 87 ம் ஆண்டுக்கான DAY CLASS ஒரு மாதத்தின் பின் ஆரம்பமாகும். பெயர்களை இன்றுமுதல் பதிவுசெய்து கொள்ளவும். (A1302)

## மணிவாக்கு

தூரத்தில் இருப்பதுபற்றி சிந்தனை செய்யாத மனிதனுக்கு துன்பம் பக்கத்தில் உண்டு.

—கொன்பூஷியஸ்

# நமது நோக்கு

## கல்முனைக் கலவரம்

இந்திய சுதந்திரத்துக்கு தடைக்கல்லாக இருந்தது இந்து- முஸ்லிம் பகைமை; இதனைப் பாராட்டிச் சீராட்டி வளர்த்து வந்தது பிரிட்டிஷ் ஆட்சி.

இரண்டாவது உலகயுத்த முடிவில், தொழிற்கட்சி ஆட்சியைக் கைப்பற்றிய போது, பிரதமர் அட்லி எவ்வகையிலும் இந்தியாவிற்கு சுதந்திரம் அளிக்க வேண்டுமென்று தீர்மானித்துவிட்டார். அரச (ஆறுவது ஜோர்ஜ்மன்னர்) சந்நிதானத்திலேயே மவுண்ட் பாட்டன் பிரபுவை அழைத்து இந்தக் கைங்கரியத்தை நிறைவேற்றி வைக்க வேண்டுமென்று பிரதமர் அட்லி ஆணையிட்டார்.

1947ம் வருட நடுவில் புதுடில்லியில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் அம்பலமான இரகசியம் வைஸ்ராய்க்கு பெரும் ஏமாற்றமளித்தது.

இந்திய சுதந்திரத்துக்கு உள்ள முட்டுக்கட்டை 'எங்கள் மேக்' என்றதை உணர்ந்தார் பிரபு மவுண்ட பாட்டன்

அந்த உணர்வை மிகச் சிப்பிளாக விளக்கி வந்தவர் பாகிஸ்தான் சிற்பி ஜின்னா. இருபெருஞ் சமூகங்களை ஒன்றுபடுத்த முயன்று இங்கு என்றும் ஆட்சிபுரிய முயல்கிறது பிரிட்டிஷ் ஆட்சி நாம் வேறுபட்ட சமூகங்கள்; எங்கள் வேற்றுமைக்குஒற்றுமை காண்பது சாத்தியமல்லவென்பதை நன்குணர்ந்த பிரிட்டிஷ் ராஜ் அதனைச் சாட்டாக கொள்வது இங்கு நிலைத்திருக்கவே இதனைக் கைவிட்டு பிரித்துவிட்டுப் போய் வாருங்கள்' என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டான வகையில் வாதித்தார் ஜின்னா.

இந்திய சுதந்திரம் பிறந்த சதை இதுவென்றால் இதனை நாம் கருத்திற் கொள்வது எதற்காக? இந்து-முஸ்லிம் பிணக்கை வளர்த்து வந்த பிரிட்டிஷ் ராஜ், தான் வளர்த்கடா தனக்கு மட்டுமல்ல இந்திய உபகண்டத்துக்கே இன்று வரைக்கும் பலியாகவிருக்கிறது.

நாடு பிரிந்தும் எதிர்பார்த்த நட்போ அல்லது குரோதமின்மையோ இன்னும் கிட்டவில்லை.

இந்தியா உலகிலேயே ஒருபெரும் தேசம் நாம் ஒரு சிறிய நாடு இந்தியாவின் இந்துக்களைப் போல் இச் சிறுதீவின் சிங்கள மக்கள் தாங்கள் பெரும்பான்மையினர் -நாடுதமது- என்ற மமதையில் நடந்து கொண்டால் கலவரங்களுக்கு என்றும் பஞ்சமிருக்காது நாடு எவ்வளவு சிறிதானாலும் பிரிவினை தவிர்க்க முடியாத நிலையை எட்டும்

பத்துப்பரப்புக் காணிக்கு அடிபிடிப்படுகிறவர்கள் பகைமை மேலீட்டால் அதனைத் துண்டுபோட்டு இரும்புக்கம்பி வேலி போடுவதில்லையா? இவ்வித தீர்ப்பையே ஜெர்மனி [மேற்கு கிழக்கு] பேர்லின் [மேற்கு கிழக்கு' ஆதரித்து 'கம்பி வேலி' அரசியல் நடத்திவருகின்றன. அது அமெரிக்க-ரஷ்ய ஆதிக்கத்தில் நடந்தது. 'பாட்டிஷன்' ஆங்கில ஆட்சியில் இந்திய பாட்டிஷன் அதே போன்றதென்றாலும் பிரிட்டன் பிரித்தாள எடுத்த தந்திரம் தனக்கவதந்திரமானதென்பதைப் புலப்படுத்துகின்றது.

இனி இலங்கையிலுள்ள கல்முனைக்கு வருவோம். சுதந்திர இலங்கையில், சிங்கள-தமிழ், சிங்கள - முஸ்லிம், தமிழ்-முஸ்லிம் கலவரங்கள் எவ்வாறு தோன்றின? ஏன் மலிந்து வருகின்றன? எவ்வாறு இவற்றை ஒழிக்கலாம்? இம்மூன்றும் மூன்று பெரும் வினாக்கள் போல தோன்றும்; உண்மையில் ஒரே ஒரு வினாவில் எழுந்தவை இவை.

இலங்கை உண்மையில் ஒரு சுதந்திர நாடா என்பதே அந்த அடிப்படைக் கேள்வி—

1948 தொடக்கம் இதுகாறும் நாம் இந்த நாடு ஒரு அடிமை நாடென்றும், சுதந்திரம் வெறும் கனவென்றும் கூறவில்லை. அது உண்மைக்குப் புறம்பானது. அதே சமயம் நாட்டுக்குச் 'சுதந்திரம்' ஒரு பரிசாக ஒரு குழுவினருக்குக் கொடுக்கப்பட்ட பண்டமென்பதையும் வற்புறுத்த வேண்டியிருக்கிறது. கல்முனை இதற்கொரு சிறு எடுத்துக்காட்டு.

இத்தகைய சுதந்திரப் பரிசு இன்று நாட்டின் தோலிருக்கச் சுளையை விழுங்கிவருகின்றது. சிங்களக் கட்சிகளுக்குள்ளேயே பிரிவு, தமிழரை முஸ்லிம்களைத் தாறுமாறுகப்பிரித்து ஆட்சியை நீண்ட காலம் நடத்தலாம் என்ற அரசியற் பரீட்சை தோல்விகண்டிருக்கிறது.

உண்மையில் இந்நாட்டு மக்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழ வழியுண்டு; அதற்கு உண்டான இடர்களையும் ஒழிக்க வழியுண்டு. அதனை நாடாது 'பிரிவினை' அரசியலை நாடினால் அது ஆட்சிக்கு மட்டுமல்ல; நாட்டிற்கே பெருவினையாகும்.

தலைமுறை தலைமுறையாகச் சமாதான வாழ்வில் இன்பங்கண்ட கிழக்கிலங்கைத் தமிழ் - முஸ்லிம் மக்கள் இன்று கல்முனையில் நெருப்புடன் விளையாடுவதற்குக் காரணம் விளக்க வேண்டியதில்லை இதற்குப் 'பீ சி' உதவுமென்றால் தீ வைப்போர் ஏன் தயங்க வேண்டும்?

அசைக்க முடியாத நிலையில் இருந்த ஆட்சி இன்று ஆளமுடியாத நிலைக்கு வந்ததைக் கல்முனை கற்பிக்கின்றது.

## இணக்கசபைகள்

மன்னார், புதன்

மன்னார் பிரிவு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பன்னிரு கிராமசேவை அலுவலர் பிரிவுகளிலும் புதிய இணக்கசபைகளை ஏற்படுத்துமாறு சகல கிராம சேவை அலுவலர்களையும் உதவி அரசாங்க அதிபர் பணிப்புரை வழங்கியுள்ளார்.

# அருள்மிகு துர்க்கை அம்பாள் இன்று கொடியேற்றம்

சைவ ஆலயங்கள் ஒவ்வொன்றும் கர்ணபரம்பரையான ஐதீகக்கதைகளைத் தன்கத்தே கொண்டுள்ளன. இதேபோல் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்திற்கும் ஒருவரலாறு உண்டு. தெல்லிப்பழை வவுணவத்தையைச் சேர்ந்த கதிர்காமர் என்னும் சைவப்பெரியார் வட இந்தியா காசிவரை தலயாத்திரை மேற்கொண்டதாகவும் அங்கு சக்திக்குரிய 64 தலங்களுக்கும்சென்றபோதுதுர்க்காதேவி சகலகலை அம்சங்களுடனும் பொலிவு பெற்றிருப்பதைப்பார்த்து வியந்து அங்கிருந்து திரும்பியபோது துர்க்கை யந்திரம் ஒன்றையும் வெண்கலத்திலான திருமுகக்கெண்டி ஒன்றையும் கொண்டு வந்து வழிபாடு செய்தார். இன்று அதுவே துர்க்கை அம்மன் ஆலயமாக வளர்ச்சியடைந்துள்ளது.

1820-ம் ஆண்டு துர்க்காதேவிக்கு முதலாவது மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது 1829-ம் ஆண்டு புரட்டாதி விஜயதசமி அன்று மாவைக் கந்தன் காங்கேசன்துறை வீதி வழியாக துர்க்காதேவி ஆலயத்திற்கு எழுந்தருளிவந்து வாழைவெட்டும் விழா ஆரம்பமாகி இன்றுவரை நடைபெற்று வருகிறது. அன்றைய தினம் மாவிட்டபுரம் தெல்லிப்பழை சைவமக்கள் இல்லம் தோறும் பூரணகும்பம் வைத்து மாவைக்கந்தனை வழிபடும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

### மு. வாமதேவன்

ஈழநாட்டை அழகுபடுத்துகின்ற துர்க்காதேவி ஆலயத்தின் மகோற்சவம் 1968-ம் ஆண்டு ஆவணிமாதம் வளர்பிறையில் ஆரம்பமாகி 18-வது மகோற்சவமாக இன்றைய கொடியேற்றம் விளங்குகின்றது.

ஆண்டுக்கொருமுறை சிவாகம முறைப்படி கொடியேற்றம் (துவஜாரோகணம்) நடைபெறுவதில் தத்துவம் உண்டு. ஒருநாட்டின் அரசனின் ஆட்சிக்கு அறிகுறி அவன் கொடியாகும். சாதாரண உலகப் பழமொழி ''அவன்கொடி கட்டி ஆள்கிறான்' என்பது இதன் பொருளை ஆராய்ந்தால் கொடி கம்பீரமாக உயரப் பறந்தால் அவன் ஆட்சி நன்றாக இருக்கிறது என்றும் குடிமக்கள் அமைதியாகவும் சுபீட்சமாகவும் தம்முள்பகை பொறாமை முதலான கெட்ட குணங்களின்றி வாழ்கிறார்கள் என்பதாகும். இதுபோலவே ஆலயங்களின் பெருவிழாவின் முதல்நாள் கொடிமரத்தில் கொடியை மந்திரங்கள் பூர்வமாக ஏற்றினால் மக்களைப் பீடித்துள்ள ஆணவமல அரசு வலியிழந்து. செயலிழந்து நடுங்க உயிர்கள் பேரானந்தப் பெருவாழ்வினை அடைந்து அவர்களது மலநீக்கமும் முத்திப்பேறுமுண்டாகும்

இத்தகைய முத்திப்பேற்றின் பயனை துர்க்காதேவி அடியார்கள். 1978-ம் ஆண்டு துர்க்காதேவி வீதி உலாவருவதற்காக புதியதொரு அழகான சிற்பவேலைப்பாடுகளுடன் கூடிய சித்திரத்தேரையும் ஆலயத்தில் கம்பீரமாகத் தோற்றமளிக்கும் இராசகோபுரத்தை 1981-ம் ஆண்டும் அம்பிகை அருள்



கொண்டு நிர்மாணித்துள்ளார்கள்.

மகோற்சவ இறுதிநாளான தீர்த்தோற்சவத்தன்று துர்க்காதேவி தன்னை நாற்புறமும் சூழவுள்ள பக்தர்களுக்கு அருள்கிடைக்கும் வகையில் தீர்த்தமாடுவதற்கு 1982-ம் ஆண்டு தனக்கொரு தீர்த்தக்கேணியை அமைத்துக்கொண்டு வருடாவருடம் அக்கேணியில் ஆனந்த தீர்த்தம் ஆடி வருகிறாள்.

மிகவும் அமைதியான சூழலும் ஆனந்தமும் நியமம் தவறாத கிரியை ஒழுங்கும் உடைய தாய் தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்களை தன்வசப்படுத்தி அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லியாக துர்க்காம்பிகையின் அற்புத நிகழ்ச்சி ஒன்று மே மாதம் 23-ம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 4-30 மணிக்கு நிகழ்ந்தது;

1985-ம் ஆண்டு 3-ம் மாதம் 4-ம் திகதி நள்ளிரவு 12 -30 மணியளவில் ஆலயத்தில் கொள்ளையடிக்கப்பட்ட அத்தனை நகைகளும் அதற்கு மேலாக ஒரு சில நகைகளும் துர்க்கா தேவியின் எழுந்தருளி வாசலில் இருக்கக் காணப்பட்ட அற்புதம் தான் அந்த அற்புதம். இந்தக்கலியுகத்திலும் இப்படி ஒரு அற்புதமா? என்னுமளவுக்கு துர்க்காம்பிகை நித்தம் நித்தம் அடியார்களோடு ஒட்டி உறவாடுகிறாள்.

துர்க்கையின் அற்புதம் கமழ்ந்த அந்த இடத்தில் இன்று தெல்லிப்பழை இந்து இளைஞர்களால் செங்கழுநீர்த் தொட்டி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது துர்க்கையின் அருளன்றி வேறொன்றுமில்லை.

### லயன்ஸ் கழகங்கள்

## மக்களின் துயர்துடைப்புக்கு உதவவேண்டும்

மாவிட்டபுரம், புதன்

இன்றுள்ள காலகட்டத்தில் வடபகுதியில் இயங்கும் லயன்ஸ் கழகங்கள் மக்களின் துயர்துடைக்க முடிந்த அளவில் பணிபுரிய வேண்டும் வெளிநாடுகளிலுள்ள லயன்ஸ் கழகங்களுடன் தொடர்பு கொண்டு அவற்றின் உதவிகளைப்பெற்று மக்களுக்கு பயன்படக் கூடிய முயற்சிகளில் ஈடுபட்டு துயரில் தவிப்பவர்களுக்கு பல வழிகளிலும் கை கொடுத்து உதவவேண்டும் ''

இவ்வாறு மாவிட்டபுரம் லயன்ஸ் கழக ஆதரவில் சுன்னாகத்தில் ஆரம்பிக்கப்பட்ட தையல்பயிற்சி நிலையத்திறப்பு விழா வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றுகையில் லயன்ஸ்கழக வலையம் ஏழின் பகுதி ஒன்றின் தலைவர் ஜி யுகேந்திரன் கூறினார்.

மாணவ லயன்ஸ் கழகத் தலைவர் திரு பி. ஜே அந்தோனிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் லயன்ஸ் மாவட்ட தொழிற் கல்விப் பயிற்சித்தலைவர் திரு. ஈ. விஜயரத்தினம் சிறப்பு விருந்தினராகக் கலந்து உரையாற்றுகையில்மாவை லயன்ஸ் கழகத்தின் பணிகளை பாராட்டிப் பேசினார்.

மற்றும் மாவை லயன்ஸ் கழக திட்டசெயற் பாட்டுக் குழு தலைவர் திரு. ஏ. வி. சர்மா முன்னாள் தலைவர் திரு. ஆர். மனோகரன் ஆகியோரும் உரையாற்றினர்.

லயன் ஏ. இராமநாதன், செயலாளர்: லயன் ஆர். என். வீரசிங்கம் ஆகியோர் இவ்வைபவத்திற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர். (எ)

## தெல்லிப்பழைமேவும்தேவி துர்க்கை அம்பாளே!

தெல்லிப்பழை மேவுந் தேவிதுர்க்கை அம்பாளே
'ஷெல்' தாக்கி மழ்கின்றார் செந்தமிழர்-
நலலாள்! நீ
பார்த்துமகிழ கின்றாயோ? பாதகரைக் கொன்
றொழிக்க
ஆர்த்தெழுந்து செய்வாய் அருள்

★

ஈழத்திற் கோயிலெல்லாம் எங்குங் கொடியேற்றம்
தாழக் 'கெலிகொப்டர்' தான்பறந்து தாக்கக்
கறங்கோலை போலக் கலங்குபவர் ஆத்மா
இறக்குதல் நித்தமுண்டோ ஈங்கு

★

துரந்தரியே! தாயே துர்க்கையெனுந் தேவி
பரந்தாமன் தங்கையே பார் நீ -நிரந்தரமாய்
பக்குவமாய் மக்களிங்கு வாழ வழிகாட்டித்
தக்கவருள் செய்வாய்நீ தான்.

-கவியரசு வெண்பாமணி முருககூரியன்

நல்ல ள்-அழகுடையாள்; நலமுடையாள்; பெண்
கறங்கோலை-காற்றிற் சுழலும் ஓலை
ஆத்மா இறக்குதல்-உயிர் இறக்கச் செய்தல்
துரந்தரி-வல்லமையுள்ளவர், பரந்தாமன்-திருமால்

## ஹராரேயில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அணிசேரா நாடுகள் ஒன்றுபட வேண்டும்.'

இவ்வாறு பிரதமர் பிரேமதாஸா ஹராரேயில் நடைபெறும் அணிசேரா மாநாட்டில் இன்று உரையாற்றுகையில் கூறினர்.

இத்தகைய செயல்களினுல் துன்பப்படுவது ஏழைகளும். அப்பாவிகளுமே எனவும் அவர் கூறினர்.

## இளம்பெண்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யிலிருந்த இளம் பெண் ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டு முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

இவ் இளம் பெண்ணின் தாயாரும் பின்னர் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. [மா]


## சுகாதார திணைக்களம் யாழ்ப்பாணம்

### அழுக்குத்துணி சலவை செய்தல்

1-1-1987ம் ஆண்டு தொடக்கம் 31-12 1987ம் ஆண்டு வரை இப்பெரும் பாகத்திலுள்ள மாவட்ட வைத்திய சாலைகளுக்கு அழுக்குத்துணி சலவை செய்வதற்கான கேள்விகள் 30-9-1986 காலை 10-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும் முழுவிபரங்களுக்கும் 29-8-86 அரசாங்க வர்த்தமானியை பார்க்கவும்.

ந. கனகசபை,
சுகாதார சேவைகள்
பிராந்திய பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

சுகாதார சேவைகள்
பிராந்திய பணிப்பாளர்
பணிமனை, யாழ்ப்பாணம்.
03-9-86.

A 1231



## கடைசி நேர வரி விளம்பரம்

### தேவை

T. V. டெக் கெசட் ரெக்கோடர்கள் றேடியோ ருன்ஸ் போமர்கள் வைண்டிங் நன்கு அனுபவம் உள்ளவர்கள் உடன் தேவை. Paineer Recording Bar பரமேஸ்வராசந்தி திருநெல்வேலி. [C 4422]

பலசரக்கு வியாபாரத்தில் அனுபவமுள்ள விற்பனையாளன் தேவை (20 - 25) வயதுக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது, மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது மாணிக்கம் ஸ்ரோஸ் 16, சின்னக்கடை நியூ மாக்கற் யாழ்ப்பாணம். (C 4424)

### றியோ

காலை 10-30, 2-30, 4-30, 6-30.
பாக்கியராஜ்-அம்பிகா நடித்த
**அந்த 7 நாட்கள்**
(கலர், புதிய பிரதி)

### வெலிங்டன்

வெண்திரையில்
10-30, 2-30, 4-30 6-30
ரிக்டானிக்கப்பலில் மீட்பு நடவடிக்கை உண்மைச் சம்பவம்.
RAISE THE TITANIC
நாளை முதல்
**நீங்கள் கேட்டவை**
(கலர்)



## ஓராண்டு நினைவஞ்சலியும் திதியும்



### கந்தன் செல்லன்

அன்னையின் அணைப்பில்:
28-03-1941

ஆண்டவன் அணைப்பில்:
13-09-1985

திதி:
03-09-1986

'கனியாத காயே உன்னைப்பணி செய்யும்வேளை எம்மை தனியாக பிரித்து உன்னை துணையாகக் கூட்டி காலன் விண்ணேக்கி சென்ருனே'

உனது நீங்காத நினைவில் நித்தம் நித்தம் உனது அன்பு மனைவி, பிள்ளைகள், தாயார், மாமன், மாமி, சகோதரர், மைத்துனர்கள் மற்றும் உற்ருர், உறவினர்களும் உமது ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கின்ருேம்.

மா. தங்கராஜா
குடும்பத்தினர்.

சுருவில் வீதி,
ஊர்காவத்துறை.

C 4428



## சபிண்டீகரண வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்



5-8-1986 அன்று செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த

அமரர்
### வி. செல்லத்துரை
அவர்களின்

சபிண்டீகரணக் கிரியை 4-9-86 அன்று வியாழக்கிழமைபுரட்டாதி மாதம் வேலணை வெள்ளைக்கடற்கரையிலும், வீட்டுக்கிருத்தியம் 5-9 86 அன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம், கந்தர்மடம், அவர்களது இல்லத்திலும் நடைபெற இருப்பதால் இவ்வைபவங்களில் தங்களைப் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்ருேம்.

இங்ஙனம்,
மனைவி, மக்கள்.

108, அரசடி வீதி,
கந்தர்மடம்
யாழ்ப்பாணம்.

C 4427



## 31-ம் நாள் நினைவஞ்சலி



### அமரர் சிற்றம்பலம் கனகசபை

6-8-86 புதன்கிழமை இயற்கை எய்திய சிற்றம்பலம் கனகசபை அவர்களது அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (5-9-86) காலை 8-00 மணிக்கு கீரிமலையிலும், வீட்டுக்கிருத்தியம் அவரது இல்லத்திலும் நடைபெறும். இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு உற்ருர், உறவினர், நண்பர்களை கேட்டுக்கொள்ளுகின்ருேம்.

மனைவி, சகோதரன்,
மைத்துன மைத்துனியர்.

ஸ்ரீ நாகேந்திர பவனம்,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி C 4425



## 31-ம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகர அழைப்பும்



### திருமதி கந்தையா பொன்னம்மா
(முந்தல் ஆச்சி)

மலர்வு: 06-11-1908
உதிர்வு: 06-08-1986
திதி: 05-09-1986

அன்பின் குடும்பத் தலைவியாய் பண்பின் சிகரமாய் வாழ்வின் வழிகாட்டியாய் இருந்து எம்மை வாழ வைத்து இறைவனடி சேர்ந்ததையிட்டு அன்ஞரின் ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிராத்திகின்ருேம்.

அன்ஞரின் சபிண்டீகர அழைப்பு 5-09-1986 வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் அனைவரையும் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்ருேம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பழம் ரேட்,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். C 4421


## விளையாட்டு மைதானத்தில் படையினர் துப்பாக்கிப்பிரயோகம்
# இருவர் பலி

(மட்டக்களப்பு நிருபர்)

விளையாட்டு மைதானத்தில் உதைபந்தாட்டத்துக்கான கோல்போஸ்டுகளை அமைத்துக் கொண்டிருந்த இளைஞர்களை நோக்கி அதிரடிப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இருவர் ஸ்தலத்திலேயே பலியானர்கள். சிலர் காயமுற்ருர்கள்.

நேற்று முன்தினம் மாலை இருதயபுரத்தில் இச்சம்பவம் நடைபெற்றது.

தச்சுத் தொழிலாளியான கந்தையா யோகராசா (21 வாது), பறங்கி இனத்தைச் சேர்ந்த அன்ரூ எல்மோ அவுட்கூன் (23 வயது) ஆகியோரே இவ்வாறு துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியானவர்களாவர்.

இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து விளையாட்டு மைதானத்தில் நின்ற சிறுவர்கள் பீதியடைந்து நாலாபக்கமும் சிதறி ஓடினர்கள். (மா)

## பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் கைது

வவனியா, புதன்

வவனியா சமநலசேவை இலாகாவின் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு நடேசமூர்த்தி இன்று வவனியா பொலிசாரினுல் கைதுசெய்யப்பட்டார் இவர் மேல்விசாரணைக்காக வவனியா ராணுவ முகாமில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இவர் கைது செய்யப்பட்டதையடுத்து இவரது மனைவி வவனியா தெற்குப்பகுதிஉதவி அரசாங்க அதிபரிடம் புகார் தெரிவித்துள்ளார். [ஊ]

## யாழ். எஸ். பி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது. இப்பதவிக்கு ஒருவர் நியமிக்சப்பட்டாலும் அவர் சுகயீன லீவில் இருக்கிருராம்.

தற்போது இப் பதவியை ஏற்க பொலிஸ்மா அதிபர் திணைக்களத்திலிருந்து எவரும் முன்வராததால் அப்பதவியைத் தற்காலிகமாக பலாலி பொலிஸ் அத்தியட்சகர் திரு. சரத் பொரலெச்ச வகித்து வருகிருர். (சி)

## படையினர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ முகாம்களின் மீதான தாக்குதல்கள் நடைபெற்றுக்கொண்டிருப்பதால் இத்தாக்குதல்களால் இராணுவ தரப்பில் ஏற்பட்டுளள சேதவிபரங்கள் தமக்குக் கிடைக்கவில்லையென்றும்தமது தரப்பில் எதுவித இழப்புகளுமில்லையென்றும் அறிக்கை கூறுகிறது.

### அரசாங்க அறிக்கை

இது இவ்வாறிருக்க அரசாங்கம் விடுத்துள்ள அறிக்கையில் மன்ஞருடன் பிறமாவட்டங்களை இணைக்கும் பிரதான பாலம் தகர்க்கப்பட்டுள்ளதால் சகல போக்குவரத்து தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும், உணவுப் பொருள்கள், மருந்து வகைகள் கடல் மார்க்கமாகத்தான் கொண்டு செல்ல வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுளளது.

இச்சம்பவத்தில் மன்ஞர் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் போராளிகளினுல் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாகவும் அரசாஙகம் அறிவித்துள்ளது (மா)

## முடிவு திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

"தொலை ஆசிரியர் கல்வி பாடநெறி"யில் சேர்ந்து பயில்வதற்கான ஆசிரியர்களைத் தெரிவு செய்ய விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் திகதி பிற்போடப்பட்டுளளது!

ஜுலை 18ந் திகதியின் அரசாங்க வர்த்தக மானியில் மேற்படி விடயம் பிரசுரமாகி இருந்தது இவ் விளம்பரத்தின் பிரகாரம் விண்ணப்ப முடிவு திகதி ஆகஸ்ட் மாதம் 5ந் திகதி என குறிக்கப்பட்டிருந்தது.

ஆயினும், யாழ் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கத்தின் வேண்டுதலின் பேரில் இவ் விண்ணப்பத்திகதி செபடம்பர் 20ந் திகதியாக நீடிக்கப்பட்டுள்ளது

இந் நெறிக்கு விண்ணப்பிக்கவுள்ள ஆசிரியர்கள் தமது விண்ணப்பங்களை யாழ் கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர். (ச)

## ஈ. பி. ஆர் ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோரின் சிறப்புச் சொற்பொழிவுடன், முதல் நாள் உறை விற்பனையும் இடம் பெறும். அன்றையதினம் குறித்த நேரத்தில் யாழ் குடாநாடு பூராவும் 'முதல் நாள் உறை'கள் விற்பனை செய்யப்படும் என்றும் அறிவித்துள்ள ஈ பு. வி. முன்னணி பொது மக்களையும் திரளாகக்கலந்து கொள்ளும்படி வேண்டுகோள் விடுத்துள்ளது. (அ)


## முதலாவது பிறந்ததின வாழ்த்து

### செல்வன் சைலஜன்

உடுவில் செல்வராசா கௌசலாதேவி தம்பதிகளின் செல்வப்புதல்வன் சைலஜன் தனது முதலாவது பிறந்த தினத்தை (4-9-86) இன்று உடுவில் சரஸ்வதி பவனத்தில் சிறப்பாகக் கொண்டாடுகிருர். இவரைப் பெற்ருேரும் உறவினர்களும் பல் கலையும்கற்று பலலாண்டு வாழ்க என வாழ்த்துகிருர்கள். (C-4429)



## முக்கிய அறிவித்தல்

சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தக சங்கம் புனர் அமைப்பு செய்யவிருப்பதால் சாவகச்சேரிநகரசபை எல்லைக்குட்பட்ட சகல கைத் தொழிற்சாலைகளும் வர்த்தக நிலையங்களையும் பதிவுசெய்து அங்கத்தவர்களாக சேரும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். 5-9-86 க்கு முன்னர் கீழ்க்காணும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

செயலாளர்,
விமலாஸ்,
No 9 நவீனசந்தை
சாவகச்சேரி.

[C-4416]

## கிளிநொச்சி கச்சேரிக்குச் செல்ல

# உத்தியோகத்தர்கள் மறுப்பு

கிளிநொச்சி செவ்

கிளிநொச்சியில் உள்ள மாவட்ட அரசாங்க செயலகத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் உத்தியோகத்தர்கள்கிளிநொச்சிக் கச்சேரிக்கு சென்று கடமையாற்ற மறுத்துள்ளனர்.

இராணுவ முகாமிற்கு அருகில் கச்சேரி இருப்பதனாலேயே அங்குசென்று பணிபுரியஇவர் மறுத்துள்ளனர்.

இதைத்தொடர்ந்து முரசுமோட்டை, வெளிக்கண்டல் ஆகிய பகுதிகளில் கச்சேரிப் பிரிவுகள் திறக்கப்பட்டுள்ளதாக மேலதிக அரசாங்க அதிபர் ஸ். முருகவேள் தொவித்துள்ளார்.

இது இவ்வாறு இருக்க கிளிநொச்சி பட்டினசபை அலுவலகம் மூன்றுமாத இடைவேளையின்பின் கரடிப் போக்கில் உள்ள முன்னைய அலுவலத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது. தேசிய சேமிப்பு வங்கியும் கரடிப்போக்கில் இயங்கத் தொடங்கியுள்ளது.

(ஒ-இ)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்
சுந்தரம்பிள்ளை
தர்மரெட்ணம்

(இலங்கை துறைமுகம்
கொழும்பு
அன்னையின் மடியில்;
1926 - 01 - 03
இறைவனின் அடியில்:
1986 - 08 - 22

அன்புடையீர்;

நிகழும் அக்ஷய வருடம் ஆவணிதிங்கள் திருதியை திதியில் 22ம் திகதி வியாழக்கிழமை (22-08-1986 சிவபதம் அடைந்த அமரர் சுந்தரம்பிள்ளை தர்மரெட்ணம் அவர்களின் அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய கிரியைகள் எமது இல்லத்தில் நிகழும் புரட்டாதி திங்கள் 5ம் திகதி நாளை வெள்ளிக்கிழமை (5-9-1986) நடைபெற இருப்பதால்அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அடியார்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரின்ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டுகிறேன்.

இங்ஙனம்
திருமதி த. கனகம்மா,
(சாமி அம்மா)
28/5, மணல்தறைஒழுங்கை,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(C 4414)

யாழ்ப்பாண

## மறைமாவட்ட 100-வது ஆண்டு

யாழ்ப்பாணம், வியா:

யாழ். மறைமாவட்ட 100-வது ஆண்டுவிழா யாழ்ப்பாண ஆசனக்கோவில் முன்றலில் நேற்று முன்தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

யாழ் ஆயர் தியோகுப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் ஆசனக் கோவிலில் கூட்டுத்திருப்பலி பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது இக்கூட்டுத் திருப்பலியில் யாழ். ஆயர் தியோகுப்பிள்ளை, திருமலை-மட்டுநகர் ஆயர் கிங்ஸிலி சுவாம்பிள்ளை, மன்னார்-வன்னி ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதைத் தொடர்ந்து யாழ். ஆசனக்கோவில் முன்றலில் நடைபெற்ற பொது வைபவத்தில் அருட் சகோதரி ஸிற்றறின் வரவேற்புரை நிகழ்த்தினார். தாய்மார்கள் சார்பில் திருமதி மரியாம்பிள்ளையும், பொது நிலையினர் சார்பில் டாக்டர் ஜே. பி. ஸிபிலிப்பும், 'கல்வி வளர்ச்சி-அமலரி தியாகிகள் சேவை' பற்றி சென். பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண. பிரான்ஸிஸ் ஜோசப்பும் உரைநிகழ்த்தினார்கள்.

யாழ். மறைமாவட்ட சேவைகள் பற்றி மேற்படி மூன்று ஆயர்களும் சிறப்புச் சொற்பொழிவாற்றியது குறிப்பிடத்தக்கது

விழாவின் இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

(வி-இ)

## சுன்னாகம் கூ. சங்கத்தின் நடவடிக்கை

வாசாவிளான், புதன்

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் தமதுபகுதி விவசாயிகளிடமிருந்து விவசாய விளைபொருள்களை கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தி வருகிறது.

இணுவில், சுன்னாகம், ஏழாலை. குப்பிளான், புன்னாலைக்கட்டுவன் ஆகிய கிராம விவசாயிகளிடமிருந்து வெங்காயம், மிளகாய் ஆகியவிளைபொருள்களை கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்திவருகிறது.

இந்நடவடிக்கையினால் விவசாயிகளுக்கு தற்போது ஏற்பட்டுள்ள சந்தைப்படுத்தல் நெருக்கடிகளை ஓரளவு குறைக்க முடியும் எனவும்நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

## இன்றைய பலன்

மாதம்—ஆவணி
திகதி—19 (4-9-1986)
கிழமை—வியாழன்
திதி—அமாவாசை பி.ப. வரை.
நக்ஷத்திரம்—பூரம் முழு நாளும்

மேடம்:- பெரியோர் ஆதரவு உண்டு; பொதுப் பணிகளில் ஆர்வம் பிறக்கும் புண்ணியகாரியங்களில் ஈடுபாடு ஏற்படும்.

இடபம்:- வணிகர்களுக்கு வியாபார விருத்தியுண்டு. புதிய முயற்சிகள் கைகூடும், செலவினங்கள் கைக்கடங்கியதாக இருக்கும்.

மிதுனம்:- நினைத்த காரியத்தில் வெற்றியுண்டு. எதிர்த்தவர்களே பாராட்டச் செய்வர் பணவிவகாரங்களிலும் நல்ல திருட்பமுண்டு.

கடகம்:- அதிக சிந்தனைகள் சிறிய தலையிடியைக் கொடுக்கும். உடல் நலம் பாதிக்கப்படும். எவ்விடயத்திலும் அதிககட்டுப்பாடு தேவை.

சிங்கம்:- சிந்தனை புதிர் போடும் சீறிவரும கோபம். பெரியவர்களைப் பேணவும். இன்று அமைதிநன்று

கனனி:- புதிய முயற்சிகளில் ஆர்வம் தோன்றக் கூடும் ஒளிமயமான சூழ்நிலை உருவாகும். வீட்டிலுள்ளவர்களின் அன்பும் ஆதரவும் உண்டு.

துலாம்:- பொருமை நிழல் உங்களைத் தொடரும் உதவி செய்யப்போய் உபத்திரவத்தைத் தேடிக் கொள்ள நேரும். இன்று அவதானம் வேண்டும்

விருச்சிகம்:- வாகனச்சொந்தக் காரர்களுக்கு நன்மையுண்டு. தாய்வழியால் தனவரவும் உண்டு. தொழிலும் சிறப்புண்டு

தனுசு:- அறவழிகளில் மன நாட்டம் செல்லும் தாராள மனப்பான்மை மூலம் பணமும் செலவாகும். இளைய பிள்ளையால் மகிழ்ச்சிக்கும் இடமுண்டு

மகரம்:- சிறிய விடயம்கூட சிரமாகத் தோன்றும். உள் வீட்டிலேயே பூசல்கள் தலை தூக்கும். வாய்வுப் பதார்த்தங்களை தவிர்த்துக் கொள்ளவும

கும்பம்:- களஸ்திரவழியால் மகிழ்ச்சிகரமரன சம்பவம் இடம் பெறும். நீண்டநாள் பகை நிவர்த்தியாகும் காதலர்களுக்கு கற்கண்டான தினம்.

மீனம்:- பேராசையின் மூலம் குறுக்கு வழியை நாடுவீர்கள், இதனால் விபரீதங்கள் தோன்றக் கூடும். எதையும் சமளிக்க வேண்டிய சர்தர்ப்பங்களும் ஏற்படலாம்.

திருமலை
வே. ரவீந்திரன்

பாடசாலை நேரத்தில்

## இராணுவ ரோந்து நிறுத்தப்படவேண்டும்

கிளிநொச்சி, புதன்

கிளிநொச்சியில் பாடசாலைகள் நடைபெறும் நேரத்தில் இராணுவ ரோந்து நிறுத்தப்படவேண்டும் என்று கோரும் தீர்மானம் கிளிநொச்சிநகரப்புற பாடசாலை ஆசிரியர்கள் பெற்றோர் மாணவர் நலன் விரும்பிகள் அடங்கியபொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பரந்தனில்நடைபெற்ற இக் கூட்டத்திற்கு கிளிநொச்சி கொத்தணி அதிபர் இரா. சின்னத்தம்பி தலைமைவகித்தார்.

கிளிநொச்சி இராணுவ முகாமுடன் இருக்கும் கனிஷ்ட மகாவித்தியாலயத்தை நடத்த முடியாதுள்ளதாகவும் இப்பாடசாலைக்கு தமது பிள்ளைகளை அனுப்பப்போவதில்லை எனவும் இங்கு உரையாற்றிய பல பெற்றோர்கள் தெரிவித்தார்கள்.

(ஒ)

யாழ். மாவட்ட

## பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்குடையிலான ஆங்கிலப் போட்டிப் பரீட்சைகள் எதிர்வரும் 6-ம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகிறது.

பிரிவு 1, 2, 3 க் குரிய மாணவர்களுக்கான எழுத்துப் பரீட்சை சொல்வதெழுதல், வாய்மொழிமூல பரீட்சை 6-ம் திகதி காலை யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

மற்றும் 15-ம், 16-ம், 18-ம் திகதிகளில் முறையே பிரிவு 3, பிரிவு 2, பிரிவு 1 ற்கானதும் ஏனைய பரீட்சைகளும் யாழ். இந்து மகளிர்கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி, யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலைகளிலும் நடைபெறும்.

இந்த நிகழ்ச்சிகளின் போது பிரதம விருந்தினர்களாக யாழ்ப்பாணம் பிரதம கல்வி அதிகாரிகள் திரு. கே. சோமசுந்தரம் திரு. வி. தங்கராஜா திரு. கே. கந்தசாமி ஆகியோரும் இறுதி நாள் நிகழ்ச்சியில் யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இரா சுந்தரலிங்கமும் கலந்து கொள்வார்கள்

இந்த ஆங்கில போட்டிப் பரீட்சைகளுக்கான சகல ஒழுங்குகளையும் வெளிக்கள ஆங்கில ஆலோசர்கள் திரு. எஸ். தெய்வதவபாலன் திரு. ஆர் அருமைநாயகம் ஆகியோர் கவனித்து வருகிறார்கள்.

(சி-இ)

## வெளிநாடு அனுப்புவதாக பணம்வாங்கியவர் தலைமறைவு

பண்டத்தரிப்பு, புதன்

மத்திய கிழக்கு நாடுகளில் வேலை வாய்ப்பு பெற்றுக் தருவதாக உறுதி கூறி பண்டத்தரிப்பு, சாந்தை, சுழிபுரம், சில்லாலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 16 இளைஞர்களிடம் பல்லாயிரக்கணக்கான ரூபாய்களைப் பெற்ற வடபகுதியை சேர்ந்த நபர் ஒருவர் அனைவரையும் ஏமாற்றி விட்டு தமது மனைவியுடன் வெளி நாட்டுக்கு சென்று விட்டார

இதனால் தங்கள் வீட்டு நகைகளை அடைவு வைத்தும் சொத்துகளை அடைவு வைத்தும் சொத்துக்களை ஈடு வைத்தும்பணத்தை கொடுத்த மேற்படி இளைஞர்கள் மிகுந்த வேதனையடைந்துள்ளார்கள்.

இந்த நபர் மத்திய கிழக்கு நாடொன்றில் இரு வருடகாலம் வேலை செய்து விட்டு மீண்டும் ஊருக்கு திரும்பி வந்து தாம் வெளிநாட்டு வேலை வய்ப்பு பெற்றுக் கொடுக்கும் முகவர் நிலையம் ஒன்றின் ''சப் ஏஜன்ட்'' என்று கூறி இப்பகுதியைச் சேர்ந்த மேற்படி இளைஞர்கள் ஒவ்வொருவரிடமு முற்பணமாக 15 ஆயிரம் 20 ஆயிரம் என்று பெற்றுக் கொண்டாராம்.

மாதங்கள் பல சென்றும் இவர் எவரையும் வெளி நாட்டுக்கு அனுப்பாததினால் பணம் கொடுத்தவர்கள் இவரை நெருக்கினார்களாம், இந் நிலையில் இந்த நபர் இந்தியாவுக்கு ரகசியமாகச் சென்று அங்கிருந்து வெளி நாடு ஒன்றுக்கு சென்றுவிட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி இளைஞர்கள் இவரது மனைவியிடம சென்று கட்டிய பணத்தை தருமாறு கேட்டு நச்சரிக்கவே சமீபத்தில் அவரும் கணவரிடம் சென்றடைந்து விட்டாராம்.

(எ)

## காணமல் போனவர்களின் விபரங்கள் திரட்டும்பணி

யாழ்ப்பாணம், வியாழன்

காணமல் போனவர்களின் விபரங்களைத்திரட்டும் பணியில் 'மேர்ஜ்' என்னும்மனித உரிமைகள் ஸ்தாபனம் ஈடுபட்டுள்ளது

இதேவேளை காணமல்போனவர்களின் முழு விபரங்களும் கிடைக்கும்பட்சத்தில் அவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சியிலும் மேற்படி நிறுவனம் ஈடுபடுவதுடன் கண்டுபிடிக்க முடியாதவர்களின் உறவினர்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுப்பதற்கு இந்த விபரங்கள் உதவும் என்றும் கருதப் டுகின்றது.

காணமல் போனவர்கள் விபரங்கள் குறித்து என்.எம். எக்ஸ்சொர்ணபாலா, சட்ட இணைப்பு உத்தியோகத்தர் 'மேர்ஜ் 6' எலோ எவனியூ, கொழும்பு-3 என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது

வவுனியா விமானத்தளவிஸ்தரிப்பின்போது வீடுகளை இழந்து நிர்க்கதியானவர்களும் திரு சொர்ணபாலாவுடன் தொடர்பு கொள்ளலாம் என் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ டென்மார்க்
★ ஜேர்மன் ★ பிரான்ஸ்

ஆகிய நாடுகளுக்கு கொழும்பில் இருந்து நேரடிப் பிரயாணம் மேற்கொள்ள அரிய வாய்ப்பு. செல்ல விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

எதிர்வரும் 15-ம் திகதி அழைத்துச் செல்ல இருப்பதால் 15-ம் திகதிக்கு முன் பதிவுசெய்து கொள்ளவும்.

குவைத், அபுதாபி, சவூதி அரேபியா ஆகிய நாடுகளுக்கு வருமானம் பெற ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்
பாஸ்போட் பொண்ட், டிக்கட் என்பன
செய்து கொடுக்கப்படும்

GROUP ATLANTIC

(சிங்கள மகாவித்தியாலயம் முன்பாக)

163, Hospital Road, Jaffna.

(A 1065)

# சோவியத் கப்பல் விபத்து 320 பேர் பலி என அச்சம்

மாஸ்கோ, ஆகஸ்ட்-3

**கருங்கடலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற சோவியத் பயணிகள் கப்பல் விபத்தில் சுமார் 320 பேர் கொல்லப்பட்டிருக்கலாமென அஞ்சப்படுகின்றது. 79 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.**

1200 பயணிகள் அக்கப்பலில் இருந்தனர். விபத்தையடுத்து சுமார் 800 பேர்வரை நீரிலிருந்தும் வெளியே எடுக்கப்பட்டுக் காப்பாற்றப்பட்டனர். இப்பயணிகளில் 340பேர் பாடசாலை மாணவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

'அட்மிரல் நகிமோ' என்ற விபத்திற்குள்ளான அக்கப்பல், சோவியத்தின் சரக்குக் கப்பல் ஒன்றுடனேயே மோதிக் கொண்டது.

இந்த இரு கப்பல்களும் ஒன்றுடனொன்று நேரெதிரில் மோதினவென்று நகிமோ, கப்பலின் உயிர் தப்பிய சிப்பந்திகள் தெரிவித்தனர்.

இம்மோதலை யடுத்து, 'நகிமோ'வின் இயந்திர அறை சேதமடைந்தது கப்பல் காப்டன் கப்பலைச் சேதமுற்றநிலையில் கரைசேர்க்க முனைந்துள்ளார். ஆயினும் இதன் மாலுமிச் சக்கரம் இடங்கொடாததால் அம்முயற்சி கைகூடவில்லை தொடர்ந்து இரண்டாசப் பிளந்த நிலையில் 'நகிமோ' நீரில் மூழ்கியது. 15 நிமிடங்களில் இக்கப்பல் நீரில் மூழ்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இக்கப்பலின் சுமார் 800 பயணிகள் நீரில் தத்தளித்துக் கொண்டிருந்தவேளை காப்பாற்றப்பட்டுளளனர். 320 பேரைக் காணவில்லை. இவர்கள் நீரில் மூழ்கியிருக்கலாமென அஞ்சப்படுகின்றது.

மீட்புப்பணிகளில்சோவியத் கடற்படைக் கப்பல்களும், ஹெலிக்காப்டர்களும் தொடர்ந்து ஈடுபட்டுள்ளன.

உலகச் செய்திகள்

## ஆபிரிக்க சனத்தொகை உலக வங்கி திருப்தி

லண்டன், ஆக-3

ஆபிரிக்கக்கண்ட சனத்தொகைக் கட்டுப்பாடு குறித்து உலக வங்கி திருப்தி வெளியிட்டுள்ளது.

இருண்ட கண்டமென அழைக்கப்படும் ஆபிரிக்கக் கண்டத்தில் சனத்தொகைக் கட்டுப்பாட்டின் மூலம் அடுத்த நூற்ருண்டில் குறிப்பிடத்தக்க அளவு அபிவிருத்தியை எதிர்பார்க்க முடியுமெனவும் அவ்வங்கி தெரிவித்துள்ளது.

தற்போது ஆபிரிக்கக் கண்டத்தின் மொத்த சனத்தொகை 470 மில்லியன்களாக உள்ளது. இத்தொகை தகுந்த முறையில் கட்டுப்படுத்தப்படாதவிடத்து 2000ம் ஆண்டளவில் 700 மில்லியன்களாக அதிகரித்துக் காணப்படுமெனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

1970ம் ஆண்டுவரை ஆபிரிக்கக் கண்டத்தில் சனத்தொகைக் கட்டுப்பாடு குறித்துப் போதிய விழிப்புணர்வு ஏற்படவில்லை கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னரே சனத்தொகைக் கட்டுப்பாட்டில் ஆபிரிக்க நாடுகள் குறிப்பிடத்தக்களவு ஆர்வங்காட்டத் தொடங்கின என்றும் உலக வங்கி தெரிவித்தது.

## விடுதலை

மட்டக்களப்பு, புதன்

அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்ட, கார் சாரதி எஸ். சிவலிங்கம் விசாரணையின் பின் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இவர் மட்டக்களப்பு பிரஜைகள் குழு செயலாளர் சட்டத்தரணி சாம். தம்பிமுத்துவின் கார் சாரதியாவார்.

## ஈராக் எண்ணெய்த் தளம் ஈரானிடம் வீழ்ச்சி!

தெஹ்ரான், ஆக-3

வளைகுடாவில் அமைந்திருந்த ஈராக்கின் 'அலாமிக்' என்ற எண்ணெய் சேகரிக்கும் தளத்தை ஈரானியபடைகள் கைப்பற்றியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானியப் படைகள் மேற்கொண்ட பலத்த ஆகாய, கடல் முற்றுகையை யடுத்தே கரைகிகப்பால் கடலிலிருந்த இந்த ஈராக்கிய தளம் ஈரானியப் படைகளிடம் வீழ்ச்சியடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஈராக்கின் 'அலாமிக்' என்ற எண்ணெய் சேகரிக்கும் தளம் மிகவும் பாதுகாப்புடன் இருக்கக் காணப்பட்டது. இதில் ராடர் கருவி உட்பட பல இராணுவ சாதனங்களும் பொருத்தப்பட்டிருந்ததாகக் கூறப்பட்டது.

இதேவேளை ஈராக் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில், கடந்த ஞாயிறு இரவு முதல் இடம்பெற்ற போரில் சுமார் மூவாயிரம் ஈரானிய துருப்புகள் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது

நியுயோர்க்கில்—

## எம் ஜி. ஆருக்குப் பரிசோதனை ஆலோசனை மட்டுமே

புதுடில்லி, ஆக-3

தமிழக முதலமைச்சர் திரு. எம் ஜி ராமச்சந்திரன் நேற்றுக் காலை புதுடில்லியிலிருந்து நியூயோர்க் பயணமானுர்

இவருடன் இவரது மனைவியாரும், டாக்டர்கள் குழு ஒன்றும், பிரத்தியேக காரியதரிசி பரமசிவனும் கூடச் சென்றனர்.

எம். ஜி. ஆரின் டாக்டர்களிலொருவரான நரேந்திரன் கருத்து வெளியிடுகையில், வழக்கமாகச் செய்யவேண்டிய மருத்துவ சிகிச்சையின் பொருட்டே முதலமைச்சர் நியுயோர்க் செல்வதாகவும், பரிசோதனைகளுக்கும், மற்றும் அமெரிக்க டாக்டர்களின் ஆலோசனைகளுக்கும் மட்டுமே எம். ஜி. ஆர். உள்ளாவார் என்றும், வேறு எந்தவிதமான மாற்றங்களும் அவரது உடல் நிலையில் காணப்படவில்லை என்றும்கூறினுர்

புறாக்கிளின் மருத்துவமனையில திரு. ராமச்சந்திரனுக்கு சிகிச்சையளித்த டாக்டர்கள் மீண்டும் அவரைத் தீவிரமாகப்பரிசோதிப்பார் என்று தெரிவிக்கப்பட்டது.

## உடுபுடவைகள் வழங்கப்படும்

பருத்தித்துறை, புதன்

பருத்தித்துறையில் உள்ள வன்செயல்களினல் பாதிக்கப்பட்ட சுமார் 500 குடும்பங்களுக்கு அகதிகள் புனர் வாழ்வு நிதியம் சுமார் இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான உடுபுடவைகளை வழங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் சுமார்

(7-ம் பக்கம் பார்க்க)


உ

முருகன் அருள் முன்னிற்க

பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபாவின் நல்லாசியுடன்

யாழ். மாநகர முதல்வர் திரு. C. V. K. சிவஞானம் அவர்கள்

04-09-1986 வியாழக்கிழமை நண்பகல் 1-31க்கும் – 1-35க்கும் இடையில்

வரும் சுபவேளையில்



ANICHSA JEWELLERY

அனிச்சா ஜுவல்லறி



ஸ்தாபனத்தை

மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார்

அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் வரவேற்பவர்கள்-

கடந்த ஒன்பது ஆண்டுகால சேவையில் வடமாகாண மக்களின் நன்மதிப்பையும் நம்பிக்கையையும் பெற்ற

குயிக்ரவல்ஸ் QUICK TRAVELS

தொடரும் எமது குயிக் ரவல்ஸ் சேவையில்; பாஸ்போட், பொண்ட் விமானடிக்கற், விசா RENEWAL, ALTERATIONS, CONFIRMATION, RECONFIRMATION யில் ஆகியன துரித கதியில் வழக்கம்போல நடைபெறும்.

136, Kasthuriar Road, Jaffna.

சுபம்

நிர்வாக முகாமையாளர்: K. S. Gopal

136, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(A 4331).

# கமலா ஸ்ருடியோ

எமது ஸ்தாபனம் தற்போது பரந்தன் குமரபுரம் வீதியில் இந்து மகாவித்தியாலயத்திற்கு முன்பாக உள்ள கட்டிடத்தில் அமைந்துள்ளது என்பதை வாடிக்கையாளர்கட்கு தெரிவித்துக்கொள்கிறோம்.

[C 4405] உரிமையாளர்

★ ஒய்வூதியம் பெறுவோரது காசோலைகள்
★ அரச ஊழியரது காசோலைகள்
★ பல்கலைக் கழகங்கள் வழங்கும் காசோலைகள்

உடனடியாக பணமாக்கிக் கொள்ளலாம்

தற்போதுள்ள சூழ்நிலைகளில் காசோலை மாற்றல் தொழிற்பாடுகளினுல் திண்டாடும் அரச - கூட்டுத்தாபன ஊழியர்களும் ஒய்வூதியம் பெறுவோரும் தமது பிரச்சினைகளை தீர்ப்பதற்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

## அபிவிருத்தி நிதியம்

337 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(A-1094)

# கமல்ஸ் சேவிஸ்

நாங்கள் உங்களை டென்மார்க் நாட்டிற்கு காவிச் செல்கிறோம். இது பூச்சாண்டி அல்ல.
கமல்ஸ் சேவிஸ் தரும் ஓர் அரிய வாய்ப்பு.
டென்மார்க் செல்வோர்க்கு சொகுசான பயண வாய்ப்புடன் எமது முகவர்கள் உங்களை கொழும்பில் இருந்து நேரடியாக அழைத்துச்செல்வர்.
இது நாம் தரும் உத்தரவாதம்.
கமல்ஸ் சேவிஸ் வழங்கும் இதர சேவைகளை மறந்துவிடாதீர்கள்.
இதோ மீண்டும் உங்கள் நினைவிற்கு
உலகநாடுகள் அனைத்திற்கும் மிகக்குறைவான கட்டணத்தில் பிரயாண சீட்டுகள், விசா, வெளிநாட்டு பயணிகள் காசோலைகள், கடவைச் சீட்டுகள், பொண்ட் (BOND) இவை அனைத்திற்கும்
நகரில் நம்பிக்கை நிறுவனம்: கமல்ஸ் சேவிஸ்

## கமல்ஸ் சேவிஸ்,

பஸ் நிலைய முன் - டில்க்கா கிறீம் கவுஸ் மேல்தளம்,
யாழ்ப்பாணம். தூரவசனி சுழல் இலக்கம்; 24174

விளம்பர வடிவமைப்பு:- ஜோ. எகட்டன் + மணிக்குரல் மேஜர் ஷண் = செனித் ADS

(A-1215)

# பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க்
(இடைநிறுத்தப்பட்ட எமது டென்மார்க் பயணம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது)
கொழும்பிலிருந்து நேரடிப் பிரயாணம்
(வாரத்தில் இருமுறைப் பயணம்)

லிபியா - (Labourers)
சவூதி - கிளீனேர்ஸ்
குவைத் - கிளீனேர்ஸ்
ஈராக் - ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ்

ஆகிய நாடுகளுக்கு வருமான ஒழுங்குகள்
அத்துடன்
பாஸ்போட், பொன்ட், ரிக்கற்றிங்
ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

## யூனிவேர்சல் ஏஜென்சி

125 (455), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

[ ஆயுர்வேதக்கல்லூரிக்கு அருகாமையில் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக ]

(A 1044)


## 90-வது நாள் நினைவஞ்சலி



செல்வன்
பா. அன்பழகன்
(அம்புலி)
மலர்வு:- 29-4-1964
உதிர்வு:- 4-5-1986

துட்டரின் துவக்குக் குண்டை தூயநின் மார்பிலேந்தி விட்டனை ஆவி வீரசொர்கத்தில்விளங்குமாற்றல் பெற்றனை நண்பர் வாட பெற்றவர் வாட ஈழம் பெற்று நாமாடப் பாட பெறுவழிவகுத்த வீரா எங்கள் அன்புச் செல்வமே! உனபிரிவால் துயருறும் நாம்- நின்ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஐயா, அம்மா, தங்கைமார், தம்பிமார்' நண்பர்கள்.
வியாபாரிமூலை,
பருத்தித்துறை.
[C 4345]

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
வீரகத்தி நடேசன்
(சித்தப்பா)
அன்னை மடியில்: 18-01-1966
கண்ணன் அடியில்: 17-08-1985
திதி: 04-09-1986

எங்கள் அன்புச் செல்வத்தை இழந்து ஓராண்டு உருண்டோடி விட்டது. ஆனல் உமது நினைவுகள் எங்களை விட்டு உருண்டுவிடுமா? அன்பாலும் பண்பாலும் பாசத்தாலும் நேர்மைத் திறமையாலும் அனைவரையும் கவர்ந்தாய். நாட்டுக்காக நேர்மையாக உழைத்தாய். இனியகதை கூறி எங்களை மகிழ்விப்பாயே? எங்கு சென்றாய் குலவிளக்கே? உமது அன்பான ஆத்மா அமைதி பெற வேண்டி கண்ணனைப் பிரார்த்திக்கிறோம்.

''ஒரு பொல்லாப்புமில்லை''
சுபம்!

உமதுபிரிவால் வாடும்;
அன்பு அம்மா, அம்ம மா, சகோதரர்கள், மைத்துனர், மாமாமார், மாமிமார், சித்திமார்.
அனலைதீவு. (C4393)

# மாங்குளம் பகுதியில் இராணுவத்தினர் தேடுதல் வேட்டை; மக்கள் பெரும்பீதி

ஒட்டுசுட்டான், புதன் மாங்குளம இராணுவமுகாமிலிருந்து வெளிவரும் இராணுவத்தினர் மாங்குளம ஒலுமடு, வன்னிவிளாங்குளம் ஆகிய, பகுதிகளை இரவுவேளைகளில் சுற்றிவளைத்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இராணுவத்தினரின் இந் நடவடிக்கையால் இப்பகுதகளில் வாழும் மக்கள் பீதியுடனும், பதற்றத்துடனும் தமது வாழ்நாளை கழிக்கின்றனர். இதனுல் இரவுவேளைகளில் விவசாய வேலைகளில் ஈடுபடமுடியாமல் இப்பகுதி மக்கள் அவதிப்படுகின்றனர். [ஓ]

## உடுபுடவைகள்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

500 ரூபா பெறுமதியான உடுபுடவைகள் வழங்கப்படவுள்ளன.

பருத்தித்துறையில் இருக்கும் பாதிக்கப்பட்ட சுமார் 107 குடும்பங்களுக்கு உடுபுடவைகள் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன.

## 2-வது ஆண்டு நினைவஞ்சலி



திருமதி எலிசபெத்
செல்லம்மா
அரசரெட்ணம்
மலர்வு:- 28-3-1906
உதிர்வு:- 4-9-1984

ஈராண்டு மறைந்தாலும் உங்கள் நினைவு எம்மைவிட்டு அகலாது அம்மா! நிச்சயம் மீண்டும் சந்திப்போம் இறைவன் சந்நிதியில்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
''ராணிஸ்ரன்'',
புகையிரதநிலைய வீதி.
மன்னார். [C 4394]

## 6-வது ஆண்டு நினைவஞ்சலி



அமரர் செ. நல்லையா
(விற்ரேல் அண்ட கொம்பனி சுப்பிரின்டண்ட்)
தோற்றம்,- 26-03-1911
மறைவு:- 10-09-1980
திதி:- 04.09-1986

அன்புடனும், பாசத்துடனும் வளர்த்து அயராது உழைத்து எம்மை வாழவைத்த அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி மக்கள்,
மருமக்கள்,
பேரன்: டினேஷ்.
''புட்ப வில்லா''.
சேச் வீதி சங்கானை.
[C 4395]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
வசந்தி தனையசிங்கம்
அன்னையின் மடியில்: 26-04-50
ஆண்டவன் அடியில்: 15-09-85
திதி: 04-09-86

தாயெந்தன் வயிற்றினிலே தரணியில் முதல் உதித்தவளே மாறுத வசந்தமொன்றை என் வாழ்க்கையிலே பதித்தவளே மண வாழ்க்கைதனை அமைக்க மகிழ்வுடன் ஜேர்மன் சென்றாயே நீ நினைத்த வாழ்வு நிறைவு பெற்று அன்பு நிறைந்த கணவனை அடைந்து பூவும் பொட்டுமதும் பூரிப்புடன் தலை சாய்க்க பூமகளும் தாய்மையுற்று புதுப் பொலிவு பெற்றாயே தங்கம் என இரு மகவு அங்கு வந்துதித்தனரே காலமெல்லாம் பேரக்குழந்தையுடன் மகிழ்ந்திருக்க நினைக்கையிலே கை நழுவிச் சென்றனையோ, காலமெல்லாம்இக்கதியோ. உள்ளமது துடிக்குதம்மா உள்ளுணர்வு உனை நினைக்குதம்மா. எப்நிலை தனைதான்மற்ற ஏந்திழை யநீவாராயே மீளாத பெரும் பயணம் நீ சென்ற அதன் பிறகும் மாறுத பாசத்தால் வசந்தா வசந்தா என நிலைகுலைந்துவிட்டார் உன் தந்தை. ஆலமரம்போல நீவாழ வாஞ்சையுடன் எதிர்பாத்து நின்றோம் வேரோடு சாய்ந்த பின்பும் வேறென்ன எம் வாழ்க்கை.

உன் இழப்பால் துயருறும் கணவன், அப்பா, அம்மா, பாசத்தின் உடன் பிறப்புக்கள். உற்றார். உறவினர்.

திரு ஞானசுந்தரம், திருமதி நாகரஞ்சிதம் ஞானசுந்தரம், உடையார் ஒழுங்கை, கொக்குவில்.

[C 4410]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
வியாழக்கிழமை 4-9-86

★ 30 பேர்வரை வீட்டுக்குள் பூட்டிவைக்கப்பட்டனர் ★ இரு இளைஞர்கள் மரத்தில் கட்டி வைக்கப்பட்டு தாக்கப்பட்டனர்

# வசாவிளான் கல்லூரிக்குள் பிரவேசித்த இராணுவத்தினரின் அட்டகாசம்

## தப்பிவந்த இளைஞன் தெரிவித்த தகவல்

[வசாவிளான் நிருபர்]

வசாவிளான் மகா வித்தியாலயத்தில் மீண்டும் முகாமிடவந்த இராணுவத்தினரால் தடுத்துவைக்கப்பட்டிருந்தவர்களில் சுமார் 30 பேரளவில் முகாமுக்கு அண்மையிலுள்ள வீடொன்றுக்குள் பூட்டிவைக்கப் பட்டிருந்ததாகவும், அவர்கள் அவ்வீட்டுக்குள் அவலக்குரல் எழுப்பிக்கொண்டிருந்ததாகவும் அங்கிருந்து தப்பி வந்த சிறுவன் ஒருவன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வசாவிளான் மகா வித்தியாலயத்தை ஏராளமான பொது மக்கள் பார்வையிட்ட வண்ணமிருந்தது தெரிந்ததே. இவர்கள் சைக்கிள்களிலும், ட்ரக்டர், லாண்ட் மாஸ்டர், லொறிகளில் சென்றிருந்தனர்.

மீண்டும் மகாவித்தியாலயத்தில் இராணுவத்தினர் முகாமிட வந்த சமயம் அங்கு நின்ற பொது மக்களில் பலர் இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர். இவர்களுள் இளம் பெண்களும் அடங்குவர்.

அச்சமயம் தமது சகோதரர் ஒருவரைத் தேடிச் சென்ற சிறுவனொருவனும் இன்னொரு இளைஞரும் இராணுவத்தினரிடம் அகப்பட்டுக் கொண்டனர். இவ்விருவரையும் தனித்தனியாகக் கொண்டுசென்ற இராணுவத்தினர் சிறுவனை ஒரு பனைமரத்தடியிலும் மற்றவரை வேறொரு இடத்திலும்கட்டிவைத்துத்தாக்கினர். அச்சமயம் இளைஞரைக் கொண்டு சென்ற இடத்தில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டதாகவும், தந்திரோபாயமாக தான் ஒருவாறு தப்பி ஓடிவந்த [illegible] வும் அச்சிறுவன் [illegible] தெரிவிக்கின்றான்.

மேலும் தங்களைக் கொண்டு சென்ற இடத்திலுள்ள ஆட்களில்லா வீடொன்றுக்குள் பெண்களுட்பட சுமார் 25-30 பேர்வரை பூட்டிவைத்திருப்பதாகவும் அவ்வீட்டுக்குள்ளிருந்து அவலக்குரல்களை தான் கேட்டதாகவும் அச்சிறுவன் சொன்னான். (மா)

மூன்றுமுறிப்பில்-

## கடத்தப்பட்ட வானை நோக்கி 'ஹெலி'யிலிருந்து சூடு

வவுனியா, புதன்.

விளைபொருள்கள் கொள்வனவுக்காக கொழும்பிலிருந்து வவுனியா வந்த வானொன்று இன்று மூன்று முறிப்பில் கடத்தப்பட்டது. முஸ்லிம் ஒருவருக்குச் சொந்தமான இந்த வான் விளை பொருட்களைக் கொள்வனவு செய்து விட்டு கொழும்பு திரும்பிக்கொண்டிருக்கையிலேயே கடத்தப்பட்டுள்ளது

கடத்தப்பட்ட வான்குறுக்கு வழியால் கொண்டு செல்லப்படுகையில் அவ்வழியால் மேலே ஹெலிகொப்டர் ஒன்று வந்துள்ளது அப்போது அந்த வானின் 'ரயர்' வெடித்ததையடுத்து 'ஹெலி'யிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் வெடித்த ரயருடன் சென்ற வானை அந்த ஹெலி துப்பாக்கிப்பிரயோகம் செய்த வண்ணம் துரத்திச் சென்றதும் தவசிகுளம்-பூமாங்குளம் பகுதியில் வானைக் கடத்தியவர்கள் வானைவிட்டு இறங்கி ஓடினர். சுமார் 3 மணி நேரமாக இத்துப்பாக்கிப்பிரயோகம் நடைபெற்றது.

இச்சம்பவத்தையடுத்து இப்பகுதியில் பதற்றம் நிலவியது.

### கனகபுரம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேரடி மோதல் தொடர்பாக வெளியான செய்தியில் எந்த ஒரு தனிப்பட்ட இயக்கத்தையும் குறிப்பிடப்படவில்லை. [இ]

## சவூதியில் வேலை இழந்து நாடு திரும்பினர்

(சவூதியில் இருந்து எம். சுபேந்திரன்)

சவூதி அரேபியாவில் நீண்டகாலம் பணியாற்றிவந்த யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த ஐந்துபேர் தமது வேலையை இழந்து இலங்கை திரும்பியுள்ளனர்.

அல்காஜ் என்னும் இடத்தில் இராணுவ பயிற்சி முகாமில் பணியாற்றிவந்த பருத்தித்துறை, மீசாலை, ஏழாலை, மல்லாகம், மானிப்பாய் ஆகிய இடங்களைச் சேர்ந்த ஐவரே வேலை இழந்து கவலையுடன் நாடுதிரும்பியவர்களாவர்.

பிரஸ்தாப ஐவரும் பணியாற்றிவந்த கம்பனிக்கு தொடர்ந்து ஒப்பந்த வேலைகள் கிடைக்காததாலேயே இவர்களை இலங்கைக்கு அனுப்ப வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதாக கவலைதெரிவிக்கப்பட்டது (மா)

## மனித உணவுக்கு பாவிக்கக்கூடாது-எச்சரிக்கை

சுண்டுக்குளி, புதன்.

''வெல்வக் வீகோ'' என்ற வர்த்தக அடையாளம் பொறிக்கப்பட்ட மீன்ரின்கள் மனித உணவுக்கு பயன்படுத்தக்கூடாது என பாவனையாளர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

மேற் குறிப்பிட்ட மீன் ரின்களில் அவை உற்பத்தி செய்யப்பட்ட ஆண்டு திகதியும், எவ்வளவு காலம் பாவிக்க முடியும் என்ற ஆண்டும் குறிப்பிடப்படாது தற்பொழுது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனால் இவற்றைப்பாவிப்பவர்களுக்கு பலவித நோய்கள் ஏற்பட வாய்புண்டென்றும் இதனைப்பாவியாது தவிர்க்கப்படவேண்டுமெனவும் உள்நாட்டு வியாபாரம் ஆணையாளரினால் எச்சரிக்கை செய்யப்படுறது.

இது பற்றிய சுற்று நிருபம் ஒன்று ஒவ்வோர் மாவட்டதிலுமுள்ள உள்நாட்டு வியாபார உதவி ஆணையாளர்களுக்கு அண்மையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

### திரு. வைரமுத்து நல்லையா

வண்ணார்பண்ணை வட மேற்கு ஆனைக்கோட்டையைச் சேர்ந்த திரு வைரமுத்து நல்லையா காலமாகிவிட்டார். இவர் திருமதி இரத்தினத்தின் அன்புக் கணவரும், அப்பையா, காலஞ் சென்ற சின்னத்துரை, சோதிப்பிள்ளை செல்லம், இலட்சுமியம்மா, செல்லமணி ஆகியோரின் அன்புச்சகோதரரும், இராசரத்தினம் (யா. ப நோ. கூ சங்கம்), ஜெயராசா இராஜேஸ்வரி, இரவீந்திரன் சுட்டிடத் திணைக்களம், வவுனியா), ஸ்கந்தராஜா (சவூதி அரேபியா), பஞ்சுளா, இலங்கேஸ்வரன் [சுவிறசலாந்து], பத்மகேஸ்வரன், மாதுளா ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி அன்னலட்சுமி, திருமதி மனோன்மணி, திரு. ஜெயரத்தினம் (ஆசிரியர் உயரப்புலம் மெ மி த க. பாடசாலை), திருமதி சாந்தினி ஆகியோரின் மாமனாரும், திரு. த. பொன்னம்பலத்தின் (கச்சேரி. வவனியா) மைத்துனரும். தனலோஜன். மயூரன். பிரசன்னா, பிரதீபா, நிருபன், இதயரூபன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் ஈமக் கிரியைகளுக்காக 04.09 86 வியாழகிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து காக்கைதீவு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். (C- 44 8)

சுவர்ணபூமி திட்டத்தில்

## 42,000 பேர் காணி உறுதி பெறவுள்ளனர்

கொழும்பு, புதன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுவர்ணபூமித் திட்டத்தின் கீழ் 42, 000 பேர் காணி உறுதிகளை பெறவுள்ளனர்.

எட்டாயிரம் பேருக்கான காணி உறுதிகள் இவ்வருட இறுதிக்குள் தயாரிக்கப்பட்டுவிடுமென்றும் ஏற்கனவே 2, 600 பேருக்கான காணி உறுதிகள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரும் பிரதிகாணி ஆணையாளருமான திரு பி சிங்காரவேலு நேற்று மட்டக்களப்புக் கச்சேரியில் நடைபெற்ற செய்தியாளர்கள் மாநாட்டில் தெரிவித்துள்ளார். [சி]

## புதிதாக ஆயிரம் ஆசிரியர்கள்

கொழும்பு, புதன்

மலையகங்களில் உள்ள தமிழ் பாடசாலைகட்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்குவதற்கான நேர்முகப்பரீட்சை எதிர் வரும் 15ம் திகதி திங்கட் கிழமை நடைபெறும்.

இந்த ஆசிரியர் பதவிகளுக்கு சுமார் ஆயிரம்பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர். [இ]

## ஈ.பி.ஆர்.எல்.எவ் அறிக்கை

யாழ்ப்பாணம்,வியா.

ஆயுத ரீதியில் பன் மடங்கு பலம் வாய்ந்த எதிரிப் படைகளுடன் நாம் போரிட்டுக் கொண்டிருக்கிறோம். விடுதலைப் போராட்டத்தின் கடினமான பணிகளை நிறைவேற்றும் உளவலிமை இல்லாதவர்கள் போராட்ட களத்தை விட்டு எங்கோ கண்காணாத இடங்களுக்குத் தப்பி ஓடுகிறார்கள் உணர்வு பூர்வமாக, சுயவிருப்பத்தின் பேரில் ஈழ மக்களின் விடுதலைக்காகப் போரிட விரும்பாதவர்களை பலவந்தமாக எமது அணிகளில் வைத்திருக்க முடியாது.'' என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மக்கள் விடுதலைப் படையில் பகுதி நேரமாகச் செயற்பட்ட நாவாந்துறையைச் சேர்ந்த ராஜா [ரவி] என்பவரை படையிலிருந்து நிரந்தரமாகநீக்குகின்றோம். மக்கள் விடுதலைப் படையின் பிரதான கட்டுப்பாட்டு விதிகளையும், கவனத்திற்குரிய அம்சங்களையும் மீறி நடந்து மக்கள் மத்தியில் காடைத் தனம் புரிந்ததற்காக இவர் படையிலிருந்து நீக்கப்பட்டு மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தப்படுகிறார். தொடர்ந்தும் மக்களின் நலன்களுக்கு எதிராக இவர் செயற்பட்டால் நாம் கடுமையான நடவடிக்கை எடுப்போம் என்பதை அறியத் தருகிறோம்.'' [ஒ]

பரந்தன்——

## நெற்சந்தைப்படுத்தும் களஞ்சியத்தில் கொள்ளை

இராமநாதபுரம், புதன்

நேற்று முன்தினமிரவு பரந்தன் நெல் சந்தைப்படுத்தும் சபைக் களஞ்சியத்திலிருந்து பல லட்ச ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

ஆயுதபாணிகளாக இக் களஞ்சியத்திற்குள் பிரவேசித்த கோஷ்டியொன்று, அங்கு கடமையிலிருந்த காவலாளியை ஆயுத முனையில் பயமுறுத்தி, தனி அறையில் பூட்டி வைத்துவிட்டு அங்கிருந்த பெருந்தொகையான சாக்குகள், தராசு போன்ற பொருட்களை வாகனத்தில் ஏற்றிச்சென்றுள்ளனர் கொள்ளையிடப்பட்ட பொருட்களின் பெறுமதி மூன்று லட்ச ரூபாவுக்கு மேலெனக்கருதப்படுகிறது. (கே)

அவுஸ்திரேலியா முதல் இனிங்ஸில்

## 4 விக்கட் இழப்புக்கு 384 ஓட்டங்கள் பெற்றது

புதுடில்லி, செப் 3

அவுஸ்திரேலியா கிரிக்கெட் குழுவுக்கும் பம்பாய் குழுவிற்குமிடையில் குவாலியரில் நடைபெறும் மூன்றுநாள் கிரிக்கெட் போட்டியில் முதல் நாள் ஆட்டத்தில் அவுஸ்திரேலியா அணி தனது முதல் இன்னிங்ஸில் 4 விக்கட் இழப்புக்கு 384 ஓட்டங்களைப் பெற்றது

இதில் ஸ்ரீவ் வாக்ட் 65 ஓட்டங்களுடனும் கிரேக் மத்தியூஸ் 49 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதுள்ளனர். ரொஸ்ஸில் வென்ற அவுஸ்திரேலியாக் குழு முதலில் துடுப்பெடுத்தாட ஆரம்பத்தில் துவக்க ஆட்டக்காரர் கிரேக் றிச்சி 124 ஓட்டங்களைப் பெற்றார்

அவுஸ்திரேலியா இந்தியாவுக்கு இடையில் நடைபெறவிருக்கும்சகல டெஸ்ற், சர்வதேச ஒருநாள் போட்டிகளையும் தூரதர்ஷன் ஒளிபரப்பும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [சி]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O. Box 49. Telegram, Eelanadu. Telephone: 22389—24126.

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கரட்ணம் திருச்செல்வம்

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த திருமதி தங்கரட்ணம் திருச்செல்வம் காலமானார். இவர் திரு திருச்செல்வம் (ஓய்வுபெற்ற ஊழியர் இந்தியன் ஓவசீஸ் வங்கி) அவர்களின் அன்புமனைவியும், வசந்தா (இந்தியன் ஓவசீஸ் வங்கி, மோகன், சேதீசன் ஆகியோரின் அன்புத்தாயாருமாவார் ஈமக்கிரியைகள் இன்று [4-9-86] பி. ப. 2 மணியளவில் மாவிட்டபரத்திலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும். [C-4430]